தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

# தஞ்சாவூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(08.06.2022 முதல் 12.06.2022)

அறிக்கை எண்: 45/2022 தேதி :07.06.2022

## தஞ்சாவூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 36 °செ முதல் 39 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 27 °செ முதல் 29 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

## தஞ்சாவூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (08.06.2022 முதல் 12.06.2022)

| கடந்த வார வானிலை (03.06.2022 முதல் 06.06.2022) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலைமுன்னறிவிப்பு (08.06.2022 முதல் 12.06.2022) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 03/06 | நாள்-2 04/06 | நாள்-3 05/06 | நாள்-4 06/06 | தேதி | நாள்-1 08/06 | நாள்-2 09/06 | நாள்-3 10/06 | நாள்-4 11/06 | நாள்-5 12/06 |
| 0 | 0 | 0 | 22.9 | மழை (மி.மீ.) | 4 | 0 | 0 | 0 | 4 |
| 38 | 38 | 39 | 36 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 37 | 37 | 38 | 38 | 38 |
| 29 | 29 | 29 | 27 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 27 | 28 | 28 | 28 | 26 |
| 4 | 4 | 4 | 4 | மேகமூட்டம் (ஆக்டா) | 4 | 3 | 3 | 3 | 6 |
| 64-63 | 64-63 | 65-57 | 73-63 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70-60 | 70-60 | 70-60 | 70-60 | 70-60 |
| 6 | 6 | 5 | 5 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 8 | 8 | 8 | 8 | 8 |
| தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | காற்றின் திசை | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு |

## தஞ்சாவூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். 08.06.2022 மற்றும் 12.06.2022 ஆகிய தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 37 °செ முதல் 38 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 26 °செ முதல் 28 °செ ஆகவும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8 கி.மீ. அளவுக்கு பெரும்பாலும் தென் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | |
|---|---|
| நெல் | வரும் நாட்களில் எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி நடவு வயலை தயார் செய்யவும். |
| | நாற்றாங்காலில் இலைப்பேன் தாக்குதல் ஆங்கங்கே தென்படுவதால் இதனை கட்டுப்படுத்த தையாமீத்தாக்சைம் 25 நனையும் தூள் 40கி/ ஏக்கர் என்ற அளவில் பயன்படுத்தவும். |

| | | |
|---|---|---|
| | | நடவு வயலில் ஒரு ஏக்கருக்கு அடியுரமாக தழை/ மணி, சாம்பல் சத்துடன் 10 கிலோ ஜிங்சல்பேட்டும், 200 கிலோ ஜிப்சமும் இடவேண்டும். |
| கால்நடைகள் | மாடு | மாட்டுத் தொழுவத்திற்கு அலுமினியத்தாலான மேற்கூரை இடுவதால் கால் நடைகளுக்கு வெய்யிலின் தாக்கம் குறைக்கப்படுகிறது. |

## குறுஞ்செய்தி

வரும் நாட்களில் எதிர்பார்கப்படும் மழையை பயன்படுத்தி நடவு வயலை தயார் செய்யவும்.

**இயக்குநர்**